Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 13 | [26-05-93] | புதன்கிழமை | ஓசை 97

## மோட்டார் ஊர்திகளை பதிவு செய்ய கோரிக்கை

வடபகுதிக்கு வெளியே சென்றுவரும் ஊர்தி உரிமையாளர்கள் தமது மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்துகொள்ளுமாறு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலும் மோட்டார் ஊர்தி வைத்திருப்பவர்களுக்கான அறிவுறுத்தல் ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளனர் அதன் முழு விபரமும் வருமாறு: ''முதல் கட்டமாக யாழ். உ. அ. அதிபர் பிரிவிலும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் தமிழர் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும்!

## ஏசியா வீக் சஞ்சிகை மீதான தடை நீக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின கொடும் ஆட்சி பற்றிய கட்டுரை தாங்கிவந்த மே 12ஆம்திகதிய ஏசியாவீக் சஞ்சிகையை விற்பனைக்கு விடுமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசா குறித்து எதிரான கருத்துக்களை கொண்டிருந்த கட்டுரை இந்த ஹொங்கொங் சஞ்சிகையில் காணப்பட்டதை அடுத்து இதை சுங்கப் பகுதியினர் தடைசெய்து விற்பனைக்கு செல்வதையும் நிறுத்தினர்.

சஞ்சிகை தடைசெய்யப்பட வேண்டுமா என சுங்க திணைக்களம் சட்ட ஆலோசனையை கோரியிருந்தது. பல புத்தகக் கடை உரிமையாளர்களும் இச்சஞ்சிகையை விற்பது குறித்து சட்ட ஆலோசனை கோரியிருந்தனர். இதனைத் தொடர்ந்தே சர்ச்சை குரிய சஞ்சிகையை விற்பனைக்கு விட சட்டமா அதிபர் பணித்துள்ளார்.

## கிளாலி கடற்பரப்பில் மக்களின் பாதுகாபபுப் பணியில் மூன்று புலிகள் வீரச்சாவு

கிளாலி கடற்பரப்பில் பயணிகள் மீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்ட சிறிலங்கா கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்னர்.

நேற்று முன்தினம் மாலை 6-30 மணியளவில் இம்மோதல் இடம்பெற்றது. பயணிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்கும், பயணிகள் மீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்ட கடற்படையினருக்கும் இடையிலேயே இம் மோதல் இடம்பெற்றது. இறுதியில்



கடற்புலி கப்டன் சாஜகான்



கடற்புலி லெப்டினன்ட் மணியரசன் (சங்கணன்)



கடற்புலி லெப்டினன்ட் சேகர்

## கூட்டுப்படை தலைமைப் பணியகம் சிங்களவரிடம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து சென்று கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் தங்கியிருப்போர் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமைப் பணியகம் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

இவ் அறிக்கையில் ''வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து வந்துள்ள சிலர் கொழும்பு நகரிலும் அதற்கு அண்மித்த புறநகர் பகுதிகளிலும் விடுதிகளில் தங்கியிருக்கின்றார்கள். இவர்கள் புலிகளுடன் தொடர்புடையவர்கள்.

இவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நடந்துகொண்டு அலுவலங்கள் தொழிற்சாலைகள், வீடுகள் ஆகியவற்றில் வேலைவாய்ப்பை பெற்றிருக்கின்றனர்.

மேற்படி நபர்களின்நடவடிக்கைகள் குறித்து சந்தேகம் ஏற்படுமாயின் கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்துமாறு வேண்டுகிறோம்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு-கிழக்கில் தேர்தல் அரசாங்கம் முயற்சியாம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபை தேர்தலை நடாத்துவது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாகவும் இதன் ஒருகட்டமாகவே முன்னாள் வட - கிழக்கு முதலமைச்சர் பெருமாள்

### வரதராஜப்பெருமாள்

### யுக்திய ஆசிரியர் தெரிவிப்பு

கொழும்பு வரவுள்ளார் எனவும் யுக்திய ஆசிரியர் பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

மேலும் கொழும்பிலிருந்து திருக்கோணமலைகு விரட்டப்பட்ட ஈ. பி. டி. பி. குழுவினர் மீண்டும் கொழும்பு வந்துள்ளதாகவும் இவர்கள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக தெரிவித்ததாகவும் யுக்திய ஆசிரியர் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பில்

## சந்திரிகா விருப்பம்

(கொழும்பு)

பல்லின மக்கள் வாழும் மேல்மாகாணத்தை இன ஐக்கிய மாகாணமாக கட்டி எழுப்புவதே தனது பிரதான நோக்கம் என மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார். இதற்கென சமூக மதத் தலைவர்களது ஆதரவு பெறப்

புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் மூன்று

தல் இடம்பெற்றது. பயணிக ளுக்கு பாதுகாப்பு வழங்கும்

இடையிலேயே இம் மோதல் இடம்பெற்றது. இறுதியில்

நகரிலும் அதற்கு அண்மித்த

தொடர்புடையவர்கள்.

கள், வீடுகள் ஆகியவற்றில்

கைகள் குறித்து சந்தேகம் ஏற் படுமாயின் கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்துமாறு வேண்டு கிறோம்'' என தெரிவிக்கப் பட்டுள்ளது.



கடற்புலி கப்டன் சாஜகான்



கடற்புலி லெப்டினன்ட் மணியரசன் (சங்கணன்)



கடற்புலி லெப்டினன்ட் சேகர்

# மணலாறு மோதலில் கப்டன் மருது வீரச்சாவு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின ருக்கும் தமீழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையியே உக்கிர மோதல் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் சில நிமி டங்கள் வரை நடைபெற்ற இம் மோதலின்போது இரா ணுவதரப்பில் ஏற்பட்ட சேத வடரங்கள் தெரியவரவில்லை. விடுதலைப்புலிகள் தரப்பில் பூநகரி நல்லூரைச் சேர்ந்த கப்டன் மருது/திவாகர் [கந் தையா கைலாயநாதன்) வீரச் சாவடைந்தார்.



வீரச்சாவடைந்த திவாக ருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித் துக்கொள்கின்றனர்.

கடற்புலிகளின் உக்கிர தாக்கு தலுக்கு ஈடுகொடுக்க முடி யாத கடற்படையினர் பெரும் இழப்புடன் பின்வாங்கிச் சென் றனர்.

இம் மோதலில் 3 கடற்புலி கள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த:

[4ஆம் பக்கம் பார்க்க)

# விநாயகபுரம் மோதலில் ஒரு போராளி வீரச்சாவு

அம்பாறை மாவட்டத்தில் உள்ள விநாயகபுரம் எனுமிட த்தில் சிறிலங்கா விசேட அதி ரடிப் படையினருக்கும் தமி ழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையே மோதல் நடைபெற் றது.

கடந்த 18 ஆம் திகதி இரவு 10.40 மணியளவில் அதிரடிப் படையினருடன் நடைபெற்ற இந் நேரடி மோதலில் இராணு வத்தரப்பினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரிய வில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச் சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீர வேங்கை செம்மனச் செல்வன் (குஞ்சிலியாப்போடி குணநா யகம்,விநாயகபுரம்,அம்பாறை) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துக் கொள்கின் றனர்.

# புலிகள் பலவீனப்படும் வரை இராணுவ நடவடிக்கை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் விடுத லைப்புலிகளைப் பலவீனப் படுத்தும் அதேவேளை அரசி யல் இணக்கத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகளை யும் தாம் மேற்கொள்வோம் என சிறிலங்காவின் புதிய பிர தம மந்திரி திரு. ரணில் விக் கிரமசிங்காதெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வெளி யிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பாக வெளியி ட்ட அறிக்கையில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில்

[4ஆம் பக்கம் பார்க்க]

# வடக்கு-கிழக்கில் தேர்தல் அரசாங்கம் முயற்சியாம்

## யுக்திய ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபை தேர்தலை நடாத்துவது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை செய்து வரு வதாகவும் இதன் ஒருகட்ட மாகவே முன்னாள் வட - கிழ க்கு முதலமைச்சர் பெருமாள் கொழும்பு வரவுள்ளார் என வும் யுக்திய ஆசிரியர் பி.பி. ஸிக்கு தெரிவித்தார்.

மேலும் கொழும்பிலிருந்து திருக்கோணமலைக்கு விரட் டப்பட்ட ஈ.பி.டி.பி. குழு வினர் மீண்டும் கொழும்பு வந்துள்ளதாகவும் இவர்கள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப் பதாக தெரிவித்ததாகவும் யுக்திய ஆசிரியர் தெரிவித் தார்.

இதேவேளை கொழும்பில் உள்ள ஈ.பி. ஆர். எல் எவ்.

[4ஆம் பக்கம் பார்க்க]

# வரதராஜப்பெருமாள் கொழும்பு வருவார்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத் தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் விரை வில் கொழும்பு வரவுள்ளார் என கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது.

இந்தியா - சிறிலங்கா சமா தான உடன்படிக்கையின் படி உருவாக்கப்பட்ட முதலா வது வடக்கு-கிழக்கு மாகாண சபை முதலமைச்சரான வரத ராசப்பெருமாள் இந்திய இரா

[4ஆம் பக்கம் பார்க்க]

# சந்திரிகா விருப்பம்

(கொழும்பு)

பல்லின மக்கள் வாழும் மேல்மாகாணத்தை இன ஐக் கிய மாகாணமாக கட்டி எழுப்புவதே தனது பிரதான நோக்கம் என மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்தி ரிகா குமாரணதுங்க தெரிவித் தார். இதற்கென சமூக மதத் தலைவர்களது ஆதரவு பெறப் படும் என்றும் அவர் தெரி வித்தார்.

## இனப்பிரச்சினை குறித்து

# பேச்சுவார்த்தைக்குரிய வாய்ப்புகள் உள்ளன

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதி மக்களின் கருத்துகள் நம்பிக்கை தருகின்றன என அங்கிலிக்கன் ஆயர் வண. கென்னத் பெர்னான்டோ தெரிவித்துள்ளார். பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்

[4ஆம் பக்கம் பார்க்க)

# ஆளுநர் முடிவுக்கு எதிராக விசாரணை செய்ய முடியாது

## சட்டவல்லுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

தென், வடமேல் மாகா ணங்களில் ஐக்கிய தேசியக் கட்சி முதலமைச்சர்களை நிய மிப்பது என ஆளுநர்கள் எடுத்த முடிவை அரசியல் சட் டப்படி நீதிமன்றத்தால் விசா ரிக்க முடியாது என ஐக்கிய தேசியக்கட்சியின் சட்டவல்லு நர்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய எதிர ணியினர் முடிவெடுத்துள்ளமை தெரிந்ததே.

மேலும் வடமேல் மாகாண சபையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக் கிய தேசிய முன்னணியும் இணைந்து ஆட்சி அமைக்க இணங்கியுள்ளதாக இக் கட்சி யினர் இம் மாகாணசபை ஆளு நர் மொண்டேகு ஜயவிக்ரம விடம் கடிதத்தை சமர்ப்பித்த போது தாம் ஏற்கனவே ஐ. தேக வேட்பாளர் ஜயவிக்ரம பெரேராவை முதலமைச்சராக நியமித்துவிட்டதாக ஆளுநர் கூறினாராம்.

இத்தகவலை சுதந்திரக்கட்சி எம்.பி. நிமால் சிறிபால டி. சில்வா செய்தியாளர் மாநாட் டில் தெரிவித்தார்.

இதேபோன்று தென்மாகாண சபையிலும் எதிரணி கூட்டணி அமைத்துவிட்டதாகவும் ஆட் சியை கூட்டணியிடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை கொண்ட கடிதத்தைகூட்டணி யின் தலைவர் அமரசிறி தொடங்கொட ஆளுநர் பாகிர் மாகாரிடம் சமர்ப்பிக்கசென்ற போது அவரை சந்திக்க ஆளு நர் மறுத்துவிட்டாராம் இதன்

[4ஆம் பக்கம் பார்க்க]

# பிரிட்டிஷ் தூதுவர் பதவியும் பிரெட்மனுக்கு இல்லை?

நெல்சந்தைப்படுத்தல் சபை யின் தலைவர் டி. எம். பி. மாரப்பன பிரிட்டனுக்கான சிறிலங்கா தூதுவராக நியமிக் கப்படலாம் என வெளியுறவு அமைச்சு அதிகாரிகளை மேற் கோள்காட்டி சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய தூதுவராக பிரட்மன் வீரக்கோன் நியமிக்கப்பட லாம் என முன்னர் வந்த செய்திகள் தெரிவித்தன.

# சைக்கிள் உதிரிப்பாகம் எடுத்துவர முயற்சி

துவிச்சக்கர வண்டிகளுக் கான உதிரிப்பாகங்களை கப் பல் மூலம் குடாநாட்டுகு எடுத்துவருவதற்குமுயற்சிஎடுக் கப்பட்டு வருகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் அண்மையில் குடாநாட்டுக்கு விஜயம்செய்த சமயம் மேற்படி உதிரிப்பாகங் களின் தேவை குறித்து எடுத் துரைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கூட்டுப்படை களின் அனுமதி பெற்று ஒரு தொகுதி உதிரிப்பாகங்களைக் கப்பல் மூலம் குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது.

# ரூபவாகினி, வானொலி பணிப்பாளர்கள் மாற்றம்

## டி. பி. விஜயதுங்க நடவடிக்கை

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி திரு. டி. பி, விஜயதுங்கா ஒலி, ஒளி பர ப்புத்துறைகளில் புதிய அணுகு முறையைக் கடைப்பிடித்து வருகிறார் எனவும் இதன் ஒரு கட்ட நடவடிக்கையா கவே ரூபவாகினி மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ஆகியவற்றின் பணி ப்பாளர்களை மாற்றுவதற்கு தகவல்துறை அமைச்சர் உத் தரவிட்டுள்ளார் எனவும் பி. பி. ஸி தெரிவித்தது.

பிரேமதாசா ஆட்சியில் இரு ந்த காலத்தில் தனது ஒவ் வொரு அசைவையும்கண்டுபிடி த்து ஒலிபரப்பும்படி உத்தர விட்டிருந்தார். அத்துடன் இவ் வாறான மாற்றங்களைக் கூட

[4ஆம் பக்கம் பார்க்க]

# "விடுதலைப் புலிகள்" நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிக ளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் வைகாசி 1993 குரல் 39 ஏடு நாளை வெளிவருகின்றது.

'தலைமைஇழந்த நிலையில் சிங்களப் பேரினவாதம்' என்ற தலைப்புச் செய்தியையும், 'புலிகளின் குரல்' பகுதியில் 'புதிய ஜனாதிபதியும் இனச் சிக்கலுக்கான தீர்வும்' என்ற கருத்துரையையும் கொண்டுள்ள இந்த இதழில், 'சிங்கள தேசத்தை உலுக் கிய அரசியல் படுகொலைகள்', 'பிரேமதாசாவின் உண்மை முகம்; 'இரண்டாவது பனிப் போர்', 'புதைந்து கிடக்கும் உண்மைகள்', என்ற தலைப் புகளிலான கட்டுரைகளுடன், தளபதி கிட்டு அவர்களின் நினைவாக, லண்டனில் இசை க்கப்பட்ட கவிதையும், லெப். சின்னா என்ற போராளியின் குருதிச் சுவடும், மேலும் பல அம்சங்களும் உள்ளடங்கியுள் ளன.

## வரி விளம்பரம்

**துளிர்**

தமிழ்நாடு. புதுவை அறிவியல் இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405. அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

**வேப்பெண்ணை**

வேப்பெண்ணைக் கிருமி நாசினி உங்கள் தோட்டப் பயிர்களையும் எலுமிச்சை, தோடை இனங்களை அழிக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முற்றாகக் கட்டுப்படுத்த வல்லது இது மருந்து தேவைகளுக்கும் பாவிக்க உகந்தது. பாவித்து பயன் பெறுங்கள். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34, ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4938)

**வேப்பம் உரம்**

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி, புழுக்களை அழித்து – மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயனடையுங்கள். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி. 34, ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் (4939)

**தவறிவிட்டது**

451372033V இல் அடையாள அட்டையும் ஒரு தொகைப் பணமும் பேர்சுடன் பிறவுண் வீதிக்கும் ஓடுமடச் சந்திக்குமிடையில் 24 5 93 பி.ப. 5.00 - 6 00 மணிக்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். (4969)

**எள்ளுப்பிண்ணாக்கு தேவை**

நியாய விலையில் எள்ளுப் பிண்ணாக்கு கொள்வனவு செய்யப்படும் வழங்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி. யாழ்ப்பாணம். (சி-6883)

**தவறிவிட்டது**

25.5-93 காலையில் கிளாலிக் கடற்கரையில் கொழும்...

---

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்

## பெந்தேகொஸ்து செபவிழா

மே மாதம் 1993 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறும்.

<u>நிகழ்ச்சிகள்</u>

நாள்தோறும்:

| | | |
|---|---|---|
| காலை | 7 00 மணி | — பரிசுத்த நற்கருணை ஆராதனை |
| ,, | 9 00 மணி | — வேத வகுப்பு |
| ,, | 10 30 மணி | — சபையின் சாட்சி - கருத்தரங்கு |
| ந ப. | 12 00 மணி | — பரிந்து வேண்டல் |
| பி. ப. | 2 30 மணி | — வாலிபர் கூட்டம் |
| மாலை | 4.00 மணி | — நற்செய்திக் கூட்டம் |

இந்த நாட்களில் ஆண்டவர் பலத்த காரியங்களை செய்வாரென்று காத்திருப்போடு செபிக்கவும்.

பிதாவின் வாக்குத் தத்தம் நிறைவேற காத்திருங்கள் (அப் - 1 : 5)

யாவரும் அன்போடு அழைக்கப்படுகிறீர்கள்.

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம், மருதனாமடம், சுன்னாகம்.

(Rev Sevak Sam Alfred) (சாம் அண்ணன்) [4965]

---

உ

விசேட கழிவுடன்

## இந்து இளைஞர் மன்ற வெளியீடுகள்

இன்று ஆரம்பமாகும் சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டும். 27 6 93இல் ஆரம்பமாகும் சரசாலை இலந்தைத்திடல் அலங்கார உற்சவத்தினை முன்னிட்டும் சரசாலை இந்து இளைஞர் மன்ற வெளியீடுகள் மாணவர்கட்கு 6 7 93 வரை சாவகச்சேரி சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலையில் விசேட கழிவு விலையில் பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (3400)

---

## முதலாம் ஆண்டு நினைவு

### திருமதி சொர்ணாம்பிகை பரந்தாமன்

ஒற்றைப்பாய் மேலுன் உடுத்தாடை மெல்லணையா
இடடுக் கிடக்கவிட் டேகினையோ? - முற்கழிந்த
அவ்விரவுன் மெய்அண்மையில் ஆரத் துயில்நெஞ்சம்,
எவ்விரவில் தூங்கும் இனி?

கால்வருடிப் பின்தூங்கும் கற்புடையாய் இந்நாளில்
யார்வருடத் தூங்குவதென் றேகினையோ? - பேரன்பில்
என்னில் எனக்கினி யாளே! உனையிழந்த
பினனுமினி தோவிப் பிறப்பு?

ஒயும் பொழுதறி யாதுழைத்துப் பொன்னுடலம்
தேயும் நிலவாகத் தேய்ந்தனையே - தாயவளே
கானடந்த இல்லிடமும் கைதொட்ட பல்பொருளும்
காணக் கலங்குமே கண்!

முல்லையொரு பொன்முடி அந்தணனும் ஈற்பயந்த
செல்வப் புலவனெனுஞ் சேய்தானும் - பல்லுறவும்
சூழ்ந்திரங்கச் சொாண்மெனும் தூமணியே! மாமருந்தே!
ஆழந்துறங்கிப் போனாயோ! அன்று.

பொறறாலி யோடெவையும் போமென்னும்
பொன்மொழியை
முற்றுணர்ந் தேனிங்கு மொய்குழலே! - மற்றுலகில்
நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்

---

## இ.தொ.காவுடன் ஐக்கியம் ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

தேசிய நலன்களுக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் ஐக்கியமாக இருப்போம் என ஜனாதிபதி டி பி விஜயதுங்க தெரிவித்துள்ளார். ஐ தே.க செயற்குழு கூட்டத்தில் பேசிய அவர் ஐ தே.க வின் நேர்மையான, நீதியான கொள்கைகளால் தொழிலாளர் காங்கிரஸ் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளது என்றார்.

இ தொ. காவும் அதன் தலைவர் தொண்டமானும் ஐ. தே கவிற்கு வழங்கும் பெருமதிமிக்க ஆதரவுக்கு ஐ.தே க நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதிகூறினார்.

இம்முறை நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் மத்திய மாகாணத்தில் ஐ தே க பெரும் வெற்றிபெற இ தொ. காவுடனான கூட்டே காரணமாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு - கிழக்கு இன்னமும் எரிகின்றது

– தினேஷ் குணவர்த்தனா

வடக்கு கிழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை ஏனைய மாகாணங்களில் மீண்டும் இயங்கப்போகின்றது. வடக்கு கிழக்கு இன்னும் பற்றிஎரிகிறது என ம ஐ மு. தலைவர் தினேஷ் குணவர்தனா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவசர கால சட்டம் மீதான விவாதத்தில் பங்குபற்றிய அவர் ரூபவாஹினியையும் வானொலியையும் பாவிக்கும் விடயத்தில் சற்போதைய ஜனாதிபதி பின்பற்றும் கொள்கையைவரவேற்கிறோம் என்றார்.

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அச்சலிங்கம் சரஸ்வதி

தோற்றம் 18-05-1933 மறைவு 26-04-1993

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எங்களைப் பேணிக்காத்தும், எங்கள் எதிர்காலம் பற்றி தங்கள் உள்ளத்தில் உதிர்ந்த கற்பனைகள் நிஜமான வேளையில் நீங்கள் எங்களுடன் இல்லையே.

நினைத்து, நினைத்து மனம் துடித்தோம். அளவில்லாக் கண்ணீரை விழிகளிலே நிறைத்து விட்டு அணையாத ஜோதியென ஒளியேற்றிச் சென்று விட்டீர்களே.

முப்பத்தொரு நாட்கள் உருண்டோடிப் போய்விட்ட...

---

## நீங்காத நினைவுகளில் 2ஆம் ஆண்டு

வல்லையில் மகனாக: 21 — 01 — 1972



தாளையடியில் மாவீரனாக: 26 — 05 — 1991

### வீரவேங்கை விந்தன்

(சபாரத்தினம் ஜெயகரன்)

தம்பியவன் பாதையிலே தானும்வந்த விந்தனிவன்
நம்பிவந்த கடமையிலே நற்பெயரும் பொறித்திருந்தான்
தும்மிவிடும்கணப்பொழுதில் நம்துயரைத் துடைப்பதற்கே
இம்மியேனும் குறைவின்றி இளம்புலியாய் சீறிநின்றான்
விம்மிநின்ற மக்களெல்லாம் வீரப்புகழ் பாடிடவே—நாம்
நம்புகின்ற மண்மாதா உனை இளமையிலே பறித்தது
மேன்?

என்றும் உன் நினைவுடன் வாழும்
- குடும்பத்தினர்

ஊறணி,
வல்வெட்டித்துறை. (4963)

---

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-05-26

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரின் திடீர் சோதனையின் போதுசயனைட உட்கொண்டு வீரச்சாவெய்திய–

**ரகுமான்** (அருளம்பலம் இரகுபதி - இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

தமிழீழக் கடற்பரப்பில் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1987ஆம் ஆண்டு யாழ் - கொட்டடியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிரான நடவடிக்கையின் போது ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**2–ம் லெப். சேது** (நடராசா சிவசேது - 168/2 முத்தமிழ் வீதி, கொட்டடி - யாழ். )

யாழ் - கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**செட்டி** (கணபதிப்பிள்ளை நந்தகுமார் - மாசியப்பிட்டிச்சந்தி, சண்டிலிப்பாய் - யாழ்)

வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையின் போது உடுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

**கப்டன் வீமன்** (நவீனநாயகம் நாகராசா - நாகர் கோயில் வடமராட்சி கிழக்கு - யாழ். )

**2-ம் லெப். ரம்போசிவா** (தங்கவடிவேல் சிவகுமாரன் - உதயசூரியன் புதுவீதி, மதவடி - வலவெட்டித்துறை - யாழ். )

**செட்டி** (சுந்தரம் செல்வராசா - இமையாணன் மேற்கு, நாவலடி - உடுப்பிட்டி - யாழ். )

டைய தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். (4969)

## எள்ளுப்பிண்ணாக்கு தேவை

நியாய விலையில் எள்ளுப் பிண்ணாக்கு கொள்வனவு செய்யப்படும் வழங்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-6883)

## தவறிவிட்டது

25-5-93 காலையில் கிளாலிக் கடற்கரையில் கொழும்பிலிருந்து கொண்டுவந்த பெறுமதிமிக்க உடுபுடைவைகள், படங்கள் அடங்கிய எனது பிரயாணப்பை காணாமற்போய்விட்டது கண்டெடுத்தவர்கள் திருமதி லோகநாதபிள்ளை, 136, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4970)

## செல்ல தடை

மட்டக்களப்பு சந்தை வீதியில் சைக்கிளில் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. சந்தையில் அண்மையில் குண்டுப்பொதி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் இந்நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

## ஆசிரியர் மாரடைப்பால் மரணம்

பண்டத்தரிப்பு கோட்ட மெய்வல்லுநர் போட்டிக்கு தமது பாடசாலைப் பிள்ளைகளை அழைத்துச் சென்ற சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர் ஒருவர் போட்டி நடந்து கொண்டிருக்கும் போது மாரடைப்பால் மரணமானார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கல்லூரியில் பண்டத்தரிப்பு கோட்ட மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மார்பு வலிப்பதாக கூறிய சில்லாலை றோ.க பாடசாலை ஆசிரியர் தம்பையா இலட்சுமணசாமி (வயது 51) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

இவர் தமது பாடசாலைப் பிள்ளைகளுக்கு, தான்இல்லாவிட்டாலும் போட்டியில் ஒழுங்காக பங்கு பற்றும்படி கூறியதாக சகஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். இவரது உடல் யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. (சி)

---

ஒற்றைப்பாய் மேலுன் உடுத்தாடை மெல்லணையா
இடடுக் கிடக்கவிட் டேகினையோ? - முற்கழிந்த
அவ்விரவுன் மெய்அணையில் ஆரத் துயில்நெஞ்சம்
எவ்விரவில் தூங்கும் இனி?

கால்வருடிப் பின்தூங்கும் கற்புடையாய் இந்நாளில்
யார்வருடத் தூங்குவதென் றேகினையோ? - பேரன்பில்
என்னில் எனக்கினி யாளே! உனையிழந்த
பினனுமினி தோவிப் பிறப்பு?

ஓயும் பொழுதறி யாதுழைத்துப் பொன்னுடலம்
தேயும் நிலவாகத் தேய்ந்தனையே - தாயவளே
கானடந்த இல்லிடமும் கைதொட்ட பல்பொருளும்
காணக் கலங்குமே கண்!

முல்லையொரு பொன்முடி அந்தணனும் ஈற்பயந்த
செல்வப் புலவனெனுஞ் சேய்தானும் - பல்லுறவும்
சூழ்ந்திரங்கச் சொரணமெனும் தூமணியே! மாமருந்தே!
ஆழந்துறங்கிப் போனாயோ! அன்று.

பொறறாலி யோடெவையும் போமென்னும்
பொன்மொழியை
முற்றுணர்ந் தேனிங்கு மொய்குழலே! - மற்றுலகில்
நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறிவு விட்டேன் புரிந்து.

முன்றில் தனிப்பூத்த முல்லைக்கும் மாலைக்கும்
தென்றலொடு தீயுமிழும் திங்களுக்கும் - அன்றிலுக்கும்
தின்னும் இரையாநான் தேம்பியழ இங்குவந்(து)
என்னென்னா மதகிய தென்?

கைபோட் டுறவாடும் கற்பூரப் பெட்டகமே
மெய்போட்டி யானுறங்கும் மெல்லணையே - ஐயகோ
ஆவிதுடிக் கின்றேன் அகத்துன் நினைவழியச்
சாவொன்று வந்தாற் சரி

''தமிழ்வளர் சோலை'' பண்டிதர்
புலோலி தெற்கு, வீ. பரந்தாமன்
புலோலி.
26 05. 1993 (4955)

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



# கப்டன் அலன்

[நடனசிகாமணி பாக்கியலிங்கம்]

வீரப்பிறப்பு: 26.05.1962 வீரச்சாவு: 26.05-1987

வீரத்தின் விளைநிலமாம் வல்வையிலே
வந்து உதித்த — வேங்கையே
தமிழ் மண்ணை மீட்டெடுக்க
உன் உயிரை அர்ப்பணித்தாய்
ஆறாண்டு சென்றாலும்
ஆறிடுமோ எம் சோகம்.

வல்வெட்டித்துறை. — வ. இ. நடனசிகாமணி
(4940) இரத்தினேஸ்வரி குடும்பத்தினர்

---



# அச்சலிங்கம் சரஸ்வதி

தோற்றம் 18-05-1933 மறைவு 26-04-1993

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எங்களைப் பேணிக்காத்தும், எங்கள் எதிர்காலம் பற்றி தங்கள் உள்ளத்தில் உதிர்ந்த கற்பனைகள் நிஜமான வேளையில் நீங்கள் எங்களுடன் இல்லையே.

நினைத்து, நினைத்து மனம் துடித்தோம். அளவில்லாக் கண்ணீரை விழிகளிலே நிறைத்து விட்டு அணையாத ஜோதியென ஒளியேற்றிச் சென்று விட்டீர்களே.

முப்பத்தொரு நாட்கள் உருண்டோடிப் போய்விட்ட போதிலும், தங்கள் அழகிய திருவுருவம் எங்கள் நெஞ்சத்தில் என்றும் அணையாத் தீபமாய் ஒளிவீசிக் கொண்டிருக்கும்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

''அட்சயபவான்'' கணவன்,
தும்பளை வீதி, பிள்ளைகள்.
பருத்தித்துறை. (4964)

# 2-ம் ஆண்டு நினைவாக...

வீரப்பிறப்பு 10 — 08 — 1971



வீரச்சாவு 26 — 05 — 1991

# கப்டன் குட்டி ரமேஸ்

[தருமலிங்கம் றஞ்சன்]

(யாழ்- கட்டுவன் பகுதியில் சிறிலங்கா படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்தினார்)

எட்டி நட! எட்டி நட! எட்டி நட!
எதிர்ப்படும் அந்நியக் காலடி ஒவ்வொன்றையும்
சுட்டு விட! சுட்டு விட! சுட்டு விட!
என்றே அணிவகுத்து முன் சென்ற
'குட்டி ரமேஸ்!' உன் நினைவில் வாழுகின்றோம்!
உன் உதிரத்தால் சிவந்த இம் மண்ணை
மீட்டெடுக்க உழைக்கின்றோம்!
மீண்டும் நாம் ஆள்வோம்!!

அச்சுவேலி தெற்கு, — குடும்பத்தினர்
அச்சுவேலி. (இ)

---

கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1987ஆம் ஆண்டு யாழ் - கொட்டடியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிரான நடவடிக்கையின் போது ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**2-ம் லெப். சேது** (நடராசா சிவசேது - 168/2 முத்தமிழ் வீதி, கொட்டடி - யாழ். )

யாழ் - கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**செட்டி** (கணபதிப்பிள்ளை நந்தகுமார் - மாசியப்பிட்டிச்சந்தி, சண்டிலிப்பாய் - யாழ்)

வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது உடுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

**கப்டன் வீமன்** (நவீனநாயகம் நாகராசா - நாகர் கோயில் வடமராட்சி கிழக்கு - யாழ். )

**2-ம் லெப். ரம்போசிவா** (தங்கவடிவேல் சிவகுமாரன் - உதயசூரியன் புதுவீதி, மதவடி - வல்வெட்டித்துறை - யாழ். )

**செட்டி** (சுந்தரம் செல்வராசா - இமையாணன் மேற்கு, நாவலடி - உடுப்பிட்டி - யாழ். )

**ராஜன்** ( - சங்கத்தானை, சாவகச்சேரி - யாழ். )

யாழ்- தொண்டமானாற்றில் ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் அலன்** (நடனசிகாமணி பாக்கியலிங்கம்- பாக்கியலிங்கம் வீதி, வல்வெட்டித்துறை - யாழ். )

**நரேஷ்** (கணேசரத்தினம் கிருபாகரன் - பிரதானவீதி, தொண்டமானாறு - யாழ். )

ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது யாழ் வரணிப் பகுதியில் ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். நாகேந்திரன்** ( - மகேந்திரன் - மடுக் கோயில் - மன்னார்)

வல்வெட்டித்துறை - நெடியகாட்டுப் பிள்ளையார் கோயில் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சின் போது கொல்லப்பட்ட 15 பொதுமக்கள்,

தொண்டமானாறு - கெருடாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டு வீச்சின் போது கொல்லப்பட்ட 09 பொதுமக்கள்,

இதே ஆண்டு வீரச்சாவெய்திய-

★ **கண்ணன்** (பாலசிங்கம் - தம்பலகமம் - மட்டு )

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயினால் எமைப்பிரிந்த-

**நிசாந்தன்/குடல்** (வில்வரட்ணம் ஜெயரட்ணம்- உவர்மலை - திருமலை)

1991ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் குட்டிரமேஸ்** (தர்மலிங்கம் இரஞ்சன் - தவம் வீதி, அச்சுவேலி தெற்கு - யாழ் )

1992ஆம் ஆண்டு திருமலை - மூதூர் பச்சனூர் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய-

**லெப். தமிழ்மன்னன்/மாதவராசா** (ரத்தினம் சந்திரகுமார் – தோப்பூர், மூதூர் – திருமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6681)

## சிந்தனைக்கு

சென்மத்தில் பிறந்தது செருப்பால் அடித்தாலும் போகாது.

– தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# ஆளுநர்களின் அவலம்

இந்திய அரசியலில், மத்தியிலுள்ள அரசாங்கத்திற்கு எதிரான போக்குடைய மாநில அரசாங்கங்களில் நிலைமை எவ்வாறு நம்பிக்கைத் தன்மை அற்றதோ, அதே போன்றே அம் மாநிலங்களின் ஆளுநர்களின் நிலையும் ஆகும். அதாவது, ஆட்சிக் கவிழ்ப்புக்கள் போல், ஆளுநர் கவிழ்ப்புக்களும், இராஜினாமாக்களும் இடம்பெறுவது அங்கொன்றும் புதியதல்ல.

மாநில ஆளுநர்கள், ஜனாதிபதியின் பிரதிநிதிகள் என்ற நிலை இருக்கின்ற போதிலும், ஆளும் கட்சியின் நியமனங்கள் என்று கூறுதலே பொருத்தப்பாடானதாகும். இந்த நிலையில், மத்தியில் உள்ள அரசை ஆதரிக்கும் வரையிலேயே அவரின் பதவிக்காலம் நீடிக்கவல்லது.

இந்நிலையில், தமிழகத்தின் கடைசி இரண்டு ஆளுநர்களும் அரசியல் நெருக்கடி காரணமாக இராஜினாமாச் செய்துள்ளார்கள்- செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இதில், தி. மு. க. ஆட்சியின் போது ஆளுநராக இருந்த முன்னாள் பஞ்சாப் முதலமைச்சர் பர்னாலா, தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து, தமது பதவியை இராஜினாமாச் செய்தார். அதனைத் தொடர்ந் தற்பொழுது செல்வி ஜெயலலிதா ஆட்சி நெருக்கடியில் உள்ளபோது பீஷ்ம நாராயணசிங் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

திரு. பர்னாலா தனது பதவியைஇராஜினாமாச் செய்வதற்குப் பல அரசியல் காரணங்கள் உண்டு. இதில் முக்கியமானது, அவர் முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கின் நியமனமாகும். இந்நிலையில் பர்னாலாவிற்கும் காங்கிரஸ் சார்பு சந்திரசேகர் ஆட்சிக்கும் முரண்பாடு ஏற்பட்டமை புதுமையானதொன்றல்ல ஆனால், திரு. பர்னாலா தி.மு.க. அரசை கலைக்க சிபார்சு செய்யாத போதும் அதனைக் கலைத்தமைதான் ஆளுநர்கள் ஏன் என்ற கேள்வியை எழுப்புகின்றது.

ஆனால், திரு. பீஷ்ம நாராயணசிங் காங்கிரஸ் கட்சியின் நியமனம் ஆயினும், அவர் இராஜினாமாச் செய்ததும், அதனை அரசு எந்தவித மறுப்பும் இன்றி உடன் ஏற்றுக் கொண்டது. இதற்கு தமிழக அரசின் உணர்வுகளை பீஷ்ம நாராயணசிங் பிரதிபலிக்கத் தொடங்கியதே காரணம் எனக் கொள்ளலாம்.

ஏனெனில், பீஷ்ம நாராயணசிங் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் நெருக்க

## அராலித்துறை கண்ணிவெடிச் சம்பவம்

# விசாரணைக் குழுவின் பணிகள் வரையறுப்பு

(கொழும்பு)

1992 ஆகஸ்ட் அராலித்துறையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினை விசாரணை செய்து அறிக்கை விடும் பொருட்டு உருவாக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக்குழுவின் பணிபற்றி அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதன்படி இக்குழுவின் பணிகளாவன: குறிப்பிடப்பட்ட வெடிக்கும் இயல்புடைய சாதனத்தின் தன்மையும், வெடிப்பு இடம்பெற்ற நேரத்தில் அது வைக்கப்பட்டிருந்த சரியான இடமும்,

அந்த இடத்தில் சம்பந்தப்பட்ட வெடிக்கும் இயல்புடைய சாதனம் அமைந்திருக்க துணைநின்ற சூழல்கள்.

இந்த இடத்தில் வெடிக்கும் இயல்புடைய சாதனத்தை அமைக்க பொறுப்பான ஆள் அல்லது ஆட்கள்,

அதிகாரிகள் சென்றவாகனம் காரணமாக அந்த வெடிப்பு இடம் பெறவில்லையாயின் அந்த வெடிப்பிற்கு பொறுப்பான ஆள் அல்லது ஆட்கள்.

மேற்கூறிய செய்கைகளுக்கு ஆட்கள் எவரும் சூழ்ச்சி செய்தனரா அல்லது உடந்தையாக இருந்தனரா? ஆறுவாரங்களினுள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு விசாரணைக் குழுவுக்கு பணிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்.

இந்த விசாரணைக் குழுவின் தலைவராக கானா நாட்டைச் சேர்ந்த நீதிபதி ஒஸ்டின் நீயாபே யோஹே இவான்ஸ் அமிஸ்ஸா விளங்குவார். இவருடன் நியூசிலாந்தைச் சேர்ந்த சேர் கென்னத் ஜேம்ஸ் கீத், நைஜீரியாவின் நீதியரசர் முகமட் லாவாம் உவைஸ் ஆகியோரும் பணியாற்றுவர்.

## 16 வருடங்கள் உலகம் சுற்றிய பதிவுத் தபால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து 1977 ஆம் ஆண்டு கொழும்புக்கு அனுப்பப்பட்ட பதிவுத்தபால் கடந்த 16 வருடங்களாக இலங்கையை மட்டுமின்றி வேறு பல நாடுகளையும் சுற்றிவிட்டு வந்து சேர்ந்துள்ள சம்பவம்ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வாரம் மட்டக்களப்பு பாடும்மீன் வீதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு மட்டக்களப்பு தபால் நிலையத்திற்குவருமாறு தபால் அதிபரிடமிருந்து கடிதம் ஒன்று கிடைத்தது. அதைக்கொண்டு அவரின் கணவர் மட்டக்களப்பு தபாலகத்திற்கு சென்றார்.

அங்கு சென்றதும் அவரிடம் ஒருதபாலுறை கொடுக்கப்பட்டது. அதை அவர் பிரித்துப் பார்த்த போது அதனுள் இன்னோர் பதிவுத் தபால் காணப்பட்டது. அது கொழும்பு பரீட்சை அதிகாரிக்கு தனது மனைவி திருமணம்முடிக்கமுன் 1977 ஜூலை மாதம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

தமிழில் விலாசம் எழுதப்பட்ட இப் பதிவுக்கடிதம் விநியோகிக்கப்படாமல் 16 வருடங்களாக வெளிநாடுகளுக்கு சுற்றிவிட்டு அனுப்பியவருக்கே திரும்பி வந்துள்ளது. ஆனால் அந்த தபாலுறை திறக்கப்பட்டிருந்தது. அதனுள் அனுப்பப்பட்ட கடிதம் காணப்படவில்லை.

### டென்டுல்கர் உப தலைவர்

எதிர் வரும் ஜூலை 10ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 14ஆம் திகதி வரை இலங்கையில் கிரிக்கெட் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக அசாறுதீன் விளங்குவார். உதவித்தலைவராக சச்சின் டெண்டுல்கர் (20) நியமிக்கப்பட்டுள்ளார்.

### அடுத்த வருடம் அரசியல் தீர்வு

[கொழும்பு]

அடுத்த வருட இறுதியில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் தீர்வுத் திட்டம் தயாராகி விடும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை இதரிவித்துள்ளார்.

இதற்கான முயற்சிகள் தொடரும் அதேசமயம் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தும் கொள்கையையும் புதிய அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று பிரதமர் கூறினார்.

## மாத்தறை வாக்குச் சீட்டுகள் மலசலகூடத்தில்கண்டெடுப்பு

மாத்தறை ராகுல வித்தியாலய வளவினுள் மாகாணசபை வாக்குச் சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே மாத்தறை மாவட்ட வாக்குகள் மீண்டும் கணக்கிடப்பட வேண்டும் என எதிர்க் கட்சிகள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளன.

இதனை எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க இல்லத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.ஜே. சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் பிரதான வாக்குகணக்கெடுக்க மத்திய நிலையமாகச் செயற்பட்ட மாத்தறை ராகுல வித்தியாலய மலசல கூடத்திலும் அண்மையிலுள்ள கட்டடத் தொகுதிகளிடையேயும், அடையாளம் இடப்பட்ட வாக்குகள் பெருந் தொகையில் பெறப்பட்டதாகவும், தாம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய ஆலோசனை செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ராகுல வித்தியாலய வளவினுள் வாக்குச் சீட்டுகள் இருப்பதாக மே மாதம் 20ஆம் திகதி தமக்குத் தெரிய வந்ததாகவும், தான் செல்லும் போது அங்கு எழுபது வாக்குச் சீட்டுகள் மட்டும் இருந்ததாகவும் அதனை எடுத்துக் கொண்டு சென்று அரசாங்க அதிபரிடம் முறையிட்டதாகவும் கூறினார்.

வாக்களிக்கப்பட்ட 45 வாக்குச் சீட்டுகள் செய்தியாளரிடம் மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரால் காண்பிக்கப்பட்டன. இதில் 44 சீட்டுகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு அடையாளம் இடப்பட்டிருந்தது.

மாத்தறை ராகுல வித்தியாலயத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் தேர்தல் ஒழுங்கீனம் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டபோது இச்சம்பவம் தொடர்பாக தற்போது விசாரணை நடைபெற்று வருவதாகவும், வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் அவற்றை மீண்டும் பெட்டிகளில் போட்டு முத்திரையிடப்பட வேண்டும் என்றும் அவ்வாறு அங்கு செய்யப்படவில்லைஎன்பது ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வருவதாகவும் தெரிவித்தார்.

## 20 பொலிஸ் வாகனங்கள் பிரேமா ஆதரவாளர் வசம்

(கொழும்பு)

பிரேமதாசாவிற்கு மிகவும் வேண்டியவர்களால் பொலிஸ் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட 20க்கு மேற்பட்ட வாகனங்கள் மீண்டும் பொலிஸ் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. இது மேற்படி திணைக்கள உயர் அதிகாரிகளை சிக்கலில் மாட்டியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாசாவின் பதவிக் காலத்தில் பல்வேறு தேவைகளுக்கும் என இவ் வாகனங்கள் பொலிஸ் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டிருந்தன. இவற்றை எவ்வாறாயினும் மீளப்பெறுமாறு பொலிஸ் உயர்பீடம் அதிகாரிகளை வற்புறுத்தியதையடுத்து பெரும் சங்கடம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அகதிகளை அனுப்புவதில் மத்திய அரசு அசிரத்தை

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் மத்திய அரசு அசிரத்தை காட்டிவருவதாகத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

மாநிலத்தில் உள்ள எல்லா இலங்கைத் தமிழர்களையும் அவர்களது தாயகத்துக்குத் திருப்பி அனுப்பிவிடவேண்டும் என்பதே தமது அரசின் கொள்கை என்றும், மத்திய ... கூறியுள்ளார்.

இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களை முழுப் பாதுகாப்புடன் காவலில் வைத்திருக்க மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்றும் இந்நிலையில் ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு சவான் கூறியிருப்பது தனக்கு வியப்பை அளிக்கிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

# ஜெயலலிதாவின்குற்றச்சாட்டு மத்திய அரசுக்குச் சவால்

### ஜனதாகட்சிதலைவர்சந்திரலேகா தெரிவிப்பு

(சென்னை)

தமிழக அரசை பதவி நீக்கி சட்டப்பேரவை நடவடிக்கையையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு ஜனதாக்கட்சி கோரியுள்ளது. தமிழகத்தில் அரசியல் யாப்பின்படி மாநில அரசை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அக் கட்சியின் மாநில தலைவரும் முதலமைச்சர் ஜெயலலிதாவின் விரோதியுமான திருமதி சந்திரலேகா தெரிவித்துள்ளார்.

### அகதிமுகாமிலிருந்து தப்பியோடியவர்

யணசிங் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

திரு. பர்னாலா தனது பதவியை இராஜினாமாச் செய்வதற்குப் பல அரசியல் காரணங்கள் உண்டு. இதில் முக்கியமானது, அவர் முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கின் நியமனமாகும். இந்நிலையில் பரினாலாவிற்கும் காங்கிரஸ் சார்பு சந்திரசேகர் ஆட்சிக்கும் முரண்பாடு ஏற்பட்டமை புதுமையானதொன்றல்ல ஆனால், திரு. பர்னாலா தி.மு.க. அரசை கலைக்க சிபார்சு செய்யாத போதும் அதனைக் கலைத்தமைதான் ஆளுநர்கள் ஏன் என்ற கேள்வியை எழுப்புகின்றது.

ஆனால், திரு. பீஷ்ம நாராயணசிங் காங்கிரஸ் கட்சியின் நியமனம் ஆயினும், அவர் இராஜினாமாச் செய்ததும், அதனை அரசு எந்தவித மறுப்பும் இன்றி உடன் ஏற்றுக் கொண்டது. இதற்கு தமிழக அரசின் உணர்வுகளை பீஷ்ம நாராயணசிங் பிரதிபலிக்கத் தொடங்கியதே காரணம் எனக் கொள்ளலாம்.

ஏனெனில், பீஷ்ம நாராயணசிங் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் நெருக்கமான நல்லுறவு கொண்டிருந்தார் என்பதோடு, அவர் ஜெயலலிதாவின் கோரிக்கைக்கு செவிமடுக்க தயாராகவும் இருந்தார். இது குறித்து - காங்கிரஸ் கட்சி தவிர்ந்த - ஏனைய கட்சிகள் ஏற்கனவே குற்றம் சாட்டியும் இருந்தன. இதனை எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்த ஜெயலலிதா மீதான ஊழல் புகார் குற்றச்சாட்டுக்கள் மீது ஆளுநர் உடன் நடவடிக்கை எடுக்காமல் போனதே உணர்த்தப் போதுமானதாகும்.

இந் நிலையில், தற்பொழுது காங்கிரஸ் கட்சிக்கும் அ.தி.மு.க. அரசிற்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்ட நிலையில் அ.தி.மு.க. அரசிற்கு சார்பான போக்கைக் கடைப்பிடிக்கக் கூடிய ஆளுநர் பீஷ்ம நாராயணசிங்கை பதவியில் இருந்துவிலத்தி விட காங்கிரஸ் திட்டமிட்டது. இதுவே பீஷ்மநாராயணசிங்கின் மீதான நெருக்கடிக்குக் காரணமாகும்.

ராஜீவ்காந்தியின் கொலைவழக்கை விசாரணை செய்த கமிசன்களில் ஒன்றான வர்மா கமிசன் ராஜீவ்காந்தி கொலைக்கு தமிழக அரசின் அசிரத்தையும் காரணம் என்று தெரிவித்தது. இந்நிலையிலும் ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த பீஷ்ம நாராயண சிங் பதவி விலகாமல் தற்பொழுது பதவி விலதுகின்றார் என்றால் அவருக்கு அன்று ஏற்பட்ட நெருக்கடிகளைவிட தற்பொழுது ஏற்பட்ட நெருக்கடி உயர்வானது என்பதே பொருளாகும்.

பீஷ்ம நாராயணசிங்கின் பதவி விலகலை, தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் வரவேற்றமையானது மேலே குறிப்பிட்டவற்றை விளங்கிக் கொள்ள போதுமானதாகும். அதாவது, மத்திய அரசாங்கத்தினதும் மத்தியில் ஆளும்கட்சியின் மாநில கிளையினதும் விருப்பிற்கு ஏற்ப செயற்படாத ஆளுநர்கள் நீக்கப்படவேண்டும் என்பதே இந்திய அரசியல் மரபாகும்.

மாநிலத்தின் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தினை மாற்று. அல்லது உன்னையே மாற்றுவோம் என்ற இந்திய மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கையானது இந்திய 'ஜனநாயகத்தையும்' அரசியலமைப்பையும் ஒரு கேலிக் கூத்தாக்கும் நடவடிக்கையாகும். ஆனால், இதற்கு இந்திய அரசியல்வாதிகள் எவரையும் தனிப்பட குறைகூற முடியாது. ஏனெனில் சகலரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

துல்கார் (20) நியமிக்கப்பட்டுள்ளார்.

வில்லை.

மார் கூறினார்.

என தெரிவிக்கப்படுகிறது.

தாக தெரிவிக்கப்படுகிறது.

## அகதிகளை அனுப்புவதில் மத்திய அரசு அசிரத்தை

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் மத்திய அரசு அசிரத்தை காட்டிவருவதாகத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

மாநிலத்தில் உள்ள எல்லா இலங்கைத் தமிழர்களையும் அவர்களது தாயகத்துக்குத் திருப்பி அனுப்பிவிடவேண்டும் என்பதே தமது அரசின் கொள்கை என்றும், மத்திய அரசின் ஒத்துழைப்புப் போதுமானதாக இல்லாததால் கடந்த இரண்டு ஆண்டுகளில் சிலரையே இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடிந்ததெனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட எவரும் சிறையிலிருந்து தப்பியோடவில்லை எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

சென்னை சைதாப்பேட்டை தனி அகதிகள் முகாமிலிருந்து தப்பி சென்றுள்ள சார்ள்ஸ் நவாஸ் ராஜீவ் கொலைவழக்கில் ஒரு சாட்சியே தவிர குற்றம் சாட்டப்பட்டவரோ அல்லது குற்றவாளியோ அல்ல என்று செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களை முழுப் பாதுகாப்புடன் காவலில் வைத்திருக்க மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்றும் இந்நிலையில் ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு சவான் கூறியிருப்பது தனக்கு வியப்பை அளிக்கிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

பதிவு செய்யாத இலங்கைத் தமிழர்கள்கண்காணிப்பில்லைத்திருப்பதற்காகத்தான் தனி அகதிகள் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த முகாம்களிலிருந்து வெளியேறிய 65பேரில் தகுந்த குடியுரிமைச் சான்றிதழ் இல்லாத இலங்கைத் தமிழர்கள் தான் என்றும் அவர் தனதுஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### படை உதவி தேவையில்லை

(சென்னை)

வீரப்பன் குழுவைப் பிடிக்க இராணுவ உதவியை நாடப் போவதில்லை என கர்நாடக முதலமைச்சர் வீரப்பமொய்லி தெரிவித்தார். வீரப்பனின் கண்ணிவெடியில் காயமடைந்து சேலம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் கர்நாடக பொலிசாரை பார்வையிட்ட பின் அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

### மாநில அரசில் சந்தேகம்

[டில்லி]

தமிழக அரசின் தடுப்புக் காவலில் இருந்து அண்மையில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் தப்பிச்சென்றமை, இந்த விடயத்தில் மாநில அரசின் போக்கில் சந்தேகங்களை உருவாக்குவதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

## ஜெயலலிதாவின்குற்றச்சாட்டு மத்திய அரசுக்குச் சவால்

### ஜனதாகட்சிதலைவர்சந்திரலேகா தெரிவிப்பு

(சென்னை)

தமிழக அரசை பதவி நீக்கி சட்டப்பேரவை நடவடிக்கையையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு ஜனதாக்கட்சி கோரியுள்ளது. தமிழகத்தில் அரசியல் யாப்பின்படி மாநில அரசை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அக் கட்சியின் மாநில தலைவரும் முதலமைச்சர் ஜெயலலிதாவின் விரோதியுமான திருமதி சந்திரலேகா தெரிவித்துள்ளார்.

மத்திய புலனாய்வு நிறுவனங்கள் தமது அரசை கவிழ்க்கும் சதியில் ஈடுபட்டிருப்பதாக ஜெயலலிதா கூறிய குற்றச்சாட்டு அவரது முதிர்ச்சியின்மையை காட்டுகிறது. மத்திய அரசின் அதிகாரத்திற்கு சவால் விடுவதாகவும் உள்ளது என சந்திரலேகா தெரிவித்துள்ளார்

அகதிமுகாமிலிருந்து

## தப்பியோடியவர் அதிகாரியிடம் சரண்

[சென்னை]

கடந்த வெள்ளி திருச்செந்தூரில் உள்ள தனி இலங்கை அகதிமுகாமிலிருந்து தப்பியோடிய டெலோ குழுவைச் சேர்ந்த விஜயகுமார் அதிகாரிகளிடம் சரணடைந்துள்ளார்.

நேற்று முன் தினம் இவர் சென்னையில் அகதிகள் மறுவாழ்வு ஆணையாளர் முன் சரணடைந்தார். பொலிஸார் இவரைக் கைது செய்து திருச்செந்தூரில் உள்ள அகதிகள் முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

## சந்தை விலை விபரம் (24-05-1993)

### யாழ். மாவட்டம் சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல் வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லி யடி | பருத்தி த்துறை | கொடி காமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 27.50 | 28.30 | 28.50 | 27.75 | 28.80 | 28.50 | 29.30 | 30.00 |
| 02. | கோதுமை மா | ,, | 13.00 | 13.15 | 13.30 | 13.50 | 13.00 | 13.00 | 13.30 | 13.50 |
| 03. | சீனி | ,, | 44.50 | 47.65 | 45.00 | 46.65 | 43.30 | 40.00 | 47.65 | 54.30 |
| 04. | கத்தரி | ,, | 28.65 | 34.65 | 36.65 | 22.65 | 38.30 | 35.00 | 40.00 | 40.00 |
| 05. | வெண்டி | ,, | 24.00 | 27.00 | 20.65 | 22.65 | 20.00 | 25.00 | 32.00 | 32.00 |
| 06. | பாகல் | ,, | 40.00 | 53.00 | 33.30 | 37.50 | 40.00 | 40.00 | 39.30 | 32.00 |
| 07. | புடோல் | ,, | 23.00 | 25.30 | 20.65 | 20.00 | 25.00 | 20.00 | 22.65 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 39.30 | 52.30 | 38 30 | 32.30 | 34 30 | 38.33 | 42.65 | 37.65 |
| 09. | தக்காளி | ,, | 47.50 | 97.75 | 51.65 | — | 43.30 | 70.00 | 70.00 | — |
| 10. | வாழைக்காய் | ,, | 21.65 | 25.65 | 25.00 | 27.30 | 31.65 | 24.00 | 32.65 | 35.00 |
| 11. | பீற்றாட் | ,, | 24.50 | 28.30 | — | — | — | 20.00 | 40.00 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 17.60 | 23.50 | 17.50 | 18.80 | 17.15 | 13.00 | 19.50 | 12.00 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 115.00 | 126.65 | 130.00 | 140.00 | 126.65 | 90.00 | 96.65 | 82.50 |
| 14. | எலுமிச்சை | ,, | 225.00 | 160.00 | 200.00 | 160.00 | 240.00 | 150.00 | 216.65 | 160.00 |
| 15. | வெங்காயம் | ,, | 21.90 | 25.50 | 27.00 | 21.15 | 22.00 | 29.00 | 22.65 | 22.00 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 27.50 | 34.65 | 30.00 | 32.30 | 30.00 | 40.00 | 27.50 | 30.00 |
| 17. | இறால் | ,, | 110.00 | 121.65 | 120.00 | 78.30 | 93.30 | 120.00 | 85.00 | — |
| 18. | பெரியமீன் | ,, | 190.00 | 155.00 | 158.30 | 133.30 | 146.65 | — | 120.00 | — |
| 19. | சிறியமீன் | ,, | 90.00 | 85.00 | 120.00 | 80.00 | 110.00 | — | 60.00 | — |
| 20. | முட்டை | ஒன்று | 08.00 | 09.00 | 08.30 | 08.40 | 08.00 | 07.50 | 08.10 | 07.00 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

# ஈழநாதம்

# சிறிலங்காவில் மனித உரிமைகள்; உதவி வழங்கிடுவோர் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகள் சிறிலங்காவில் தற்போதைய மனித உரிமை நிலைவரங்கள் குறித்து குறிப்பாக ஐ நா. மனித உரிமைக் குழு செய்த சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பது பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

இதற்குமேலாக புதிய அரசின் பொருளாதாரக் கொள்கைகளையும் இவர்கள் பரிசீலித்து வருகின்றனர். இதே சமயம் மனித உரிமை நிலவரம் குறித்தும், பொருளாதாரக் கொள்கை குறித்தும் விளக்கம் அளிக்க உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளை நேரில் வந்து ஆராயுமாறு சிறிலங்கா அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் மாநாடு அடுத்த மாதம் நடைபெறவுள்ளது தெரிந்ததே.

தென், வடமேல் மாகாணசபை விவகாரம்

## முதலாவதுஎதிர்ப்பு கூட்டம் குருநாகலில் நடைபெறும்

(கொழும்பு)

வடமேல் மாகாண, தென் மாகாண முதலமைச்சர்கள் தெரிவான விதத்திற்கு ஆட்சேபனை தெரிவித்து எதிரணியினரின் முதலாவது எதிர்ப்புக் கூட்டம் குருநாகலையில் நடைபெறவுள்ளது.

இந்த இருமாகாணங்களுக்கும் ஐ தே.க. வேட்பாளர்கள் முதலமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்த காமினி திஸ்ஸ நாயக்கா எமது கட்சியும் பொதுமக்கள் முன்னணியும் கூட்டுச் சேர்ந்து மாகாண நிர்வாகத்தை அமைக்கப் போவதாக முன்னதாகவே இம்மாகாண ஆளுநர்களுக்கு அறிவித்திருந்தும் அவர் தனித்து முடிவெடுத்து ஐ தே. கவை ஆட்சி அமைக்க அழைத்திருக்கிறார் என்றார்.

இதற்கெதிராக எதிரணியினரின் பெரும் எதிர்ப்பு போராட்டத்திற்கு ஜ ஐ தே மு. யும் ஆதரவளிக்கும் என காமினிதிஸ்ஸ நாயக்கா கூறினார். இடது சாரி கட்சிகளும் இந்த எதிர்ப்பு போராட்டத்திற்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளன.

## இன்று வலை விநியோகம்

மாரீசன் கூடல் மீனவ சங்கத்தில் இருந்து கடற்புலிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளிற்கு வலை விநியோகம் செய்யும் நடவடிக்கை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கடல்வள அபிவிருத்தி பகுதியால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவர்களுக்கான வலை விநியோகம் செய்யும் நிகழ்வு இன்று காலை 11 மணிக்கு கொக்குவிலில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழக முதன்மைச் செயலகத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது

## கூட்டம்

யாழ். கூடைப்பந்தாட்ட சங்க அங்குரார்ப்பண கூட்டம் நாளை வியாழன் பி. ப. 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உடற் கல்வித்துறைப் பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

க. பொ. த. [சாதாரணம்]

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள் முடிவுகள் இன்னுமில்லை

1992ஆம் ஆண்டிற்குரிய க. பொ. த. (சா/த) பரீட்சையின் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்தில் முறையீடு செய்துள்ளனர்.

மேற்படி முடிவுகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் அனைவரும் இணைந்து பரீட்சை ஆணையாளருக்கான முறையீடு ஒன்றை தயாரித்து தரும் இடத்து இதற்கான நடவடிக்கையை யாழ் கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ள முடியுமென பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரை தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பரீட்சைத் திணைக்களத்தினால் தபாலில் சேர்க்கப்பட்ட முடிவுகள் தபால் விநியோகத்தில் சீரின்மையால் தான் தாமதமாகிறதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருந்தும் மேற்படி பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமையினால் அவர்கள் கல்வியைத் தொடர முடியாத ஓர் இக்கட்டான நிலையில் உள்ளனர். (பா)

## விசாரணைக் குழுக் கூட்டம் இன்று ஆரம்பமாகும்

ஜெனரல் கொப்பேகடுவஉட்பட பத்து சிறிலங்கா பாதுகாப்புபடை உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைசமர்ப்பிக்க கொழும்பு வந்துள்ள காமன்வெல்த் நாடுகளின் நீதிபதிகள் அடங்கிய விசேடவிசாரணைக் குழு தனது முதலாவது கூட்டத்தை பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில்இன்று காலை 9 மணிக்கு கூட்டவுள்ளது.

பிரதிசொலிசிஸ்டர்ஜெனரல் ஜெயவான்ச ஜாப்பா இதன் தொகுப்புரையை நிகழ்த்துவார். திருரஞ்சித் அபேசூரியா திருமதி கொப்பே கடுவாவின் நலன்களைக் கவனிப்பார்.

# குர்திஸ் போராளிகள் தாக்கு; 31 துருக்கிய படை பலி

குர்திஸ் இன போராளிகள் துருக்கிய இராணுவத்தினர் மீது நடாத்திய அதிரடித் தாக்குதலினால் 31 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

துருக்கியில் உள்ள விநியோ நகருக்கு அருகே பிரதான வீதியில் துருக்கிய இராணுவத்தினர் இராணுவ வாகனங்களில் வந்துகொண்டிருந்த போது குர்திஸ் போராளிகள் அவர்கள்மீது அதிரடித் தாக்குதலை நேற்று மேற்கொண்டனர்

இத்தாக்குதலை நடாத்தும் பொருட்டு குர்திஸ் போராளிகள் வீதித்தடைகளை ஏற்படுத்தியிருந்தனர் துருக்கிய இராணுவத்தினர்மீது குர்திஸ் போராளிகள் நடாத்திய முதலாவது மிகப் பெரிய அதிரடித் தாக்குதல் இதுவென செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் மாதம் துருக்கிய அரசிற்கும் குர்திஸ் போராளிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து யுத்தநிறுத்தம் அமுலானது. ஆனால் துருக்கிய இராணுவத்தினர் குர்திஸ் போராளிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்ததனாலேயேஇத்தாக்குதலை குர்திஸ் போராளிகள் நடாத்தியதாக தெரியவருகிறது.

## மோட்டார்

இரண்டாம் கட்டமாக நல்லூர் உ. அ. அதிபர் பிரிவிலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறிலங்காவால் வழங்கப்பட்ட மோட்டார் ஊர்திப் பதிவுச் சான்றிதழ், இறக்குமதிச் சிட்டை அத்தாட்சிப் பத்திரம் உள்ளவர்களும், மூல ஆவணங்கள் இல்லாதவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகிறோம். அத்துடன் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்துவடபகுதிக்கு வெளியே சென்று வரும் ஊர்தி உரிமையாளர்களும் இப் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் வேண்டப்படுகிறீர்கள்.

இத்துடன் பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் குடும்ப அட்டையையும் தவறாது கொண்டு வருமாறு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர். மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.''

## ஈரானிய விமானங்கள் ஈராக் மீது குண்டு வீச்சு

(டாக்கா)

ஈரானிய யுத்த விமானங்கள் ஈராக்மீது குண்டுவீச்சுத் தாக்குதல்களை நேற்று மேற்கொண்டன.

ஈரானிய விமானங்கள் ஈராக்கில் உள்ள ஈரானிய எதிர்ப்பு ஏவுகணைத் தளங்கள் மீதே தாக்குதல்களை நடத்தியுள்ளன. இத்தாக்குதல் குறித்து ஈரானிய அரசோ ஈராக்கில அரசோ எதுவித அறிவிப்பகளையும் வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

12 ஈரானிய யுத்த விமானங்கள் பாக்தாத்திற்கு 15 மைல் தொலைவில் உள்ள மியாகுதி தளங்கள்மீது குண்டு வீச்சு தாக்குதல்களை நடாத்தியுள்ளன.

## மாவீரர் புகழுடல்கள் இன்று மக்கள் அஞ்சலிக்கு

கிளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலி கப்டன் சாஜகான் மற்றும் கடற்புலி லெப்டினன்ட் மணியரசன் (சங்கணன்) ஆகியோரது புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வடமராட்சியில் வைக்கப்படவுள்ளன.

இவ்விரு கடற்புலிகளதும் வித்துடல்கள் இன்று மாலை 4 மணிக்கு பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டபின் 5 மணியளவில் நெல்லியடி பஸ்நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டபின் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அணிவகுப்பு மரியாதையுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் புதைகுழியில்விதைக்கப்படவுள்ளன

## பிற்போடப்பட்டது

வரும் சனியன்று கொழும்பில் நடைபெறவிருந்த பொது எழுதுவினைஞர் சேவையின் மூப்பு அடிபபடையில் அதிசிறப்பு வகுப்புக்கு பதவி உயர்வு செய்வதற்கான போட்டிப்பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் பிற்போடப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கு மனுப்பண்ணிய பரீட்சார்த்திகள் இப்பரீட்சை நடைபெற வேண்டிய மறு திகதியை யாழ். அரச அதிபருடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கும்படி கேட்கப்படுகின்றார்கள்.

## வீரவணக்கக் கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை வட்டத்தில் வைகாசி மாதத்தில் வீரச்சாவெய்திய ஒன்பது மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் (இன்று) புதன்கிழமை இரவு 8மணியளவில் ஆத்தியடி பிள்ளையார் கோவிலடியில் நடைபெறும். மாவீரர்கள் கௌரவிக்கப் படுவதோடு நினைவுப் பேருரைகள், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## ஆளுநர்

பலனர் ஐ தே.க வேட்பாளர் அமரசிறி முதலமைச்சராக ஆளுநரால் நியமிக்கப்பட்டார்.

இவை குறித்து கருத்து வெளியிட்ட ஐ. தே. க சட்ட ஆலோசகர்கள இத்தகைய கடிதங்களை உறுப்பினர்கள்

## பேச்சு

துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இப்போது ஏற்பட்டுள்ளன. புதிய ஜனாதிபதியின் வேண்டுகோளை ஏற்பதோடு அதை முன்னெடுத்துச் சென்று சுமுக தீர்வைக்காண பேச்சை தொடர ஆயத்தமாக உள்ளேன் என்றும ஆயர் கென்னத் பெர்னான்டோ மேலும் தெரிவித்தார்.

BECON

யாழ்ப்பாணம் (ஸ்ரீதர் முன்பு)

O/L DAY CLASS 1993

மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது.

3-வது புதிய பிரிவுகள் ஆரம்பம்

1-06-93 காலை 8-00 மணி

திரு. இரா. செல்வவடிவேல் — விஞ்ஞானம்
திரு. இரா. அருட்செல்வம் — கணிதம்
திரு. சதிஸ் — கணிதம்
திரு. கே. எஸ். முத்துலிங்கம் — சமூகக்கல்வி
திரு. கோப்பாய் சிவம் — தமிழ்

நினைவலைகளின்

6ஆம் ஆண்டு 2ஆம் ஆண்டு

அறிவித்திருந்தும் அவர் தனி காப்புபடை உயர் அதிகாரிகள்


# BECON

**யாழ்ப்பாணம் (ஸ்ரீதர் முன்பு)**

**O/L DAY CLASS 1993**

மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது.

3-வது புதிய பிரிவுகள் ஆரம்பம்

**1-06-93 காலை 8-00 மணி**

திரு. இரா. செல்வவடிவேல் — விஞ்ஞானம்
திரு. இரா. அருட்செல்வம் )
திரு. சதிஸ் ) கணிதம்
திரு. கே. எஸ். முத்துலிங்கம் — சமூகக்கல்வி
திரு. கோப்பாய் சிவம் — தமிழ்
திரு. ரி. ராஜன் — வர்த்தகம்
திரு. P. தவராஜா — ஆங்கிலம்
திரு. K. நாகேஸ்வரன் — சமயம்

வாரத்தில் நான்கு நாள் வகுப்புகள்

(சி-6684)



# கருணாமூர்த்தி

(விடியோ திரைப்படம்)

தற்கொலை செய்துகொள்வதற்காகத் திட்டமிட்ட முன்னாள் தமிழக திரைப்பட நடிகர் ஏ. வீ எம் இராஜன் அவர்களின் வாழ்க்கையை மாற்றிய திரைப்படம்.

**காண்பிக்கப்படும் இடங்கள்:**

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 28-05-93 | கல்வாரி தேவாலயம் பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | பி. ப. 5.30 மணி |
| 30-05-93 | மெமோரியல் ஆங்கில பாடசாலை மானிப்பாய். | பி.ப. 5.30 மணி |
| 04-06-93 | 33, கிராம விஸ்தரிப்புத் திட்டம் பாற் பண்ணை வீதி, திருநெல்வேலி. | பி ப 5.30 மணி |
| 11-06-93 | சகோ. வீ. கனகராஜா பிடாரியம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு. | பி.ப. 5.30 மணி |

அனைவரும் திரண்டு வாருங்கள்.
அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம்: இலவசம்

கல்வாரி தேவாலயம்
பிறவுண் வீதி
கொக்குவில்

(4968)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 26 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


கொண்டு அறிக்கைசமர்ப்பிக்க கொழும்பு வந்துள்ள காமன் வெல்த் நாடுகளின் நீதிபதிகள் அடங்கிய விசேடவிசாரணைக் குழு தனது முதலாவது கூட்டத்தை பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில்இன்று காலை 9 மணிக்கு கூட்டவுள்ளது.

பிரதிசொலிசிஸ்டர்ஜெனரல் ஜெயவான்ச ஜாப்பா இதன் தொகுப்புரையை நிகழ்த்துவார். திருரஞ்சித் அபேசூரியா திருமதி கொபபே கடுவாவின் நலன்களைக் கவனிப்பார்.

கல்விப் பணிப்பாளர் துரை தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பரீட்சைத் திணைக்களத்தினால் தபாலில் சேர்க்கப்பட்ட முடிவுகள் தபால் விநியோகத்தில் சீரின்மையால் தான் தாமதமாகிறதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருந்தும் மேற்படி பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமையினால் அவர்கள் கல்வியைத் தொடர முடியாத ஓர் இக்கட்டான நிலையில் உள்ளனர். (பா)

யாளர்களும் இப் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் வேண்டப்படுகிறீர்கள்.

இத்துடன் பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் குடும்ப அட்டையையும் தவறாது கொண்டு வருமாறு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர். மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.''

வரும் சனியன்று கொழும்பில் நடைபெறவிருந்த பொது எழுதுவினைஞர் சேவையின் மூப்பு அடிபபடையில் அதி சிறப்பு வகுப்புக்கு பதவி உயர்வு செய்வதற்கான போட்டிப்பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் பிற்போடப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கு மனுப்பண்ணிய பரீட்சார்த்திகள் இப்பரீட்சை நடைபெற வேண்டிய மறு திகதியை யாழ். அரச அதிபருடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கும்படி கேட்கப்படுகின்றார்கள்.

## ஆளுநர்

பிளைர் ஐ தே.க வேட்பாளர் அமரசிறி முதலமைச்சராக ஆளுநரால் நியமிக்கப்பட்டார்.

இவை குறித்து கருத்து வெளியிட்ட ஐ. தே. க சட்ட ஆலோசகர்கள் இத்தகைய கடிதங்களை உறுப்பினர்கள் ஆளுநரிடம் சமர்ப்பிக்க முடியாது அந்தந்த எதிர்க்கட்சி தலைவர்களே சமர்ப்பிக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டினர்.

## பாதுகாப்பு

★ கடற்புலி கப்டன் சாஜகான் (லூர்த்து சேவியர்சீலன் மணற்காடு, குடத்தனை, யாழ்ப்பாணம்.)

★ கடற்புலி லெப். மணியரசன் (சங்கணன்) பொன்னம்பலம் ரவீந்திரன் சுப்பர்மடம், பருத்தித்துறை.

★ கடற்புலி லெப் சேகர் (காளிமுத்து மனோகரன் மாத்தளை தற்போதைய முகவரி 6ஆம் வாய்க்கால், கிளிநொச்சி.)

ஆகிய மூன்று போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## புலிகள்

ஒடுக்கும் முயற்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் ஈடுபடுவர் எனவும் இவ் ஒடுக்கும நடவடிக்கை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே அரசியல் இணக்கத்தீர்வு ஒன்றைக்காண்பதற்கான நடவடிக்கைகளும் தொடரும் என தெரிவித்துள்ளார்.

## வீரவணக்கக் கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை வட்டத்தில் வைகாசி மாதத்தில் வீரச்சாவெய்திய ஒன்பது மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் (இன்று) புதன்கிழமை இரவு 8மணியளவில் ஆத்தியடி பிள்ளையார் கோவிலடியில் நடைபெறும். மாவீரர்கள் கௌரவிக்கப் படுவதோடு நினைவுப் பேருரைகள், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## பேச்சு

துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இப்போது ஏற்பட்டுள்ளன. புதிய ஜனாதிபதியின் வேண்டுகோளை ஏற்பதோடு அதை முன்னெடுத்துச் சென்று சுமுக தீர்வைக்காண பேச்சை தொடர ஆயத்தமாக உள்ளேன் என்றும ஆயர் கென்னத் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

## ரூபவாகினி

தானே நேரடியாகச் செய்து வந்தார் ஆனால் புதிய ஜனாதிபதி அமைச்சர்களுக்கு உரிய அதிகாரங்களை வழங்கி வருகிறார்.

தலைப்புச் செய்தியில் ஜனாதிபதியின் பெயர் இடம்பெறத் தேவையில்லையென்றுமேற்படி இரு அமைப்புக்களுக்கும் திரு விஜயதுங்கா ஏற்கனவே உத்தரவிட்டுள்ளார் எனவும் பி. பி ஸி தெரிவித்தது.

## வடக்கு

ஈ.பி டி பி. அலுவலகங்களுக்கு சிறிலங்கா இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முன்னர் இவ் அலுவலகங்கள் அக்குழுக்களின் பொறுப்பிலேயே பாதுகாப்பு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வரதராஜப்பெருமாள்

ணுவம் இலங்கையைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கையில் அவர்களுடன் சேர்ந்து வெளியேறியவர் ஆவார்.

வடஇந்தியாவில் இந்திய இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் பல இடங்களிலும் மாறிமாறி இரகசியமாக இவர் தங்க வைக்கப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

# நினைவலைகளின்

**6ஆம் ஆண்டு** **2ஆம் ஆண்டு**





அண்ணன்
**2-ம் லெப். ரம்போசிவா**
வீரப்பிறப்பு: 25-11-1968
வீரச்சாவு: 26 05-1987

இளவல்
**2-ம் லெப். உத்தவா**
வீரப்பிறப்பு: 22-01-1974
வீரச்சாவு: 12-04-1991

இவர்கள் தாய் மண்ணில் நேசம் வைத்தவர்கள் அதனால்!
தாய் மண்ணில் விதையானவர்கள்
சுதந்திர தமிழீழத்தின் புதிய சிற்பிகள்
சுட்டெரிக்கும் செஞ்சுடர்கள்
வேங்கைகள் புகழ்பாடும் போர்க்களங்களும்
எதிரியின் எரிந்த பாசறைகளும்
உங்கள் நினைவினை மீட்டிடும்
உயர்ந்த மலைகளும் நெடியகாடுகளும்
வெண் மணற் பரப்புகளும் சீதளத்
தென்றலும் குமுறும் கடலும்
உங்கள் பாதச் சுவடினை
எமது தாயகத்தில் மீண்டும் மீண்டும் ......
மரணம் வீரனின் முடிவல்ல
அவனின் வரலாற்று ஆரம்பம்

உதய சூரியன் வீதி,
வல்வெட்டித்துறை.

(4967)

-குடும்பத்தினர்

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**25-05-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9543

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0767, 24-5967, 24-9830, 42-0488, 42-9220
28-6996.